# பாசாங்குகளாலானது
# சமகால பண்பாட்டு நடத்தை வெளி
**(Simulated cultural behavior of contemporary information age)**

Journal of Social Review
Volume 2 (1)
June 2014
Department of
Social Sciences

*எம்.எல்.இஸ்ஸதீன்*

## ஆய்வுச் சுருக்கம்

*இவ்வாய்வு சமகால தொழில் நுட்ப மற்றும் தகவல் தொடர்பு யுகத்தின் மறு பக்கத்தின் சில பகுதிகளைச் சுருக்கமாக ஆராய்கிறது. இது இவ்யுகத்தின் அறிவியல்சார் நுண்ணதிகார அரசியலின் மறைகரச் செயற்பாட்டை துலக்கமுறச் செய்கிறது. இவ்வாய்வு மனிதன் இன்றைய தொழில் நுட்ப மற்றும் தகவல் தொடர்பு யுகத்தின் அபரிமிதமான வளர்ச்சியினது தாக்கத்தின் காரணமாக பேதலிக்கச் செய்யப்பட்டிருக்கிறான் என்பதைத் தெளிவுபடுத்துவதுடன் அது அவனுடைய பண்பாட்டை, நடத்தையை கேள்விக்குள்ளாக்கி இருக்கிறது என்பதையும் அது அவனை வெறும் பாசாங்கான நடத்தைக் கோலத்திற்கு இட்டுச் சென்றுள்ளதையும் விவாதிக்கிறது.*

## அறிமுகம்

அறிவொளிக் காலத்தில் உலகில் தோன்றிய தத்துவங்கள் மனித வாழ்வைச் சீர்மைப்படுத்துவதாகக் கருதப்பட்டது. அத்தத்துவங்களின் தாக்கம் விஞ்ஞானம், மதம், அரசியல், பொருளாதாரம், இலக்கியம் என எல்லாவற்றிலும் பரவியிருந்தது. அத்தத்துவங்கள் யாவுமே அதிகாரம் கொண்ட பகுத்தறிவுச் செயற்பாட்டு தன்மைகளைக் கொண்டிருந்ததனால் அதனோடு முரண்பட்ட எல்லா விதமான அம்சங்களையும் புறமொதுக்கும் நிலைக்குச் சென்றது. இதனை தத்துவங்களின் குறைபாடாகப் பார்க்க முடியும். இந்த அறிவொளித் தத்துவப் பிரயோகங்களினால் உலகம் பல போர்களையும் களநிலை மாற்றங்களையும் அழிவினையும் கண்டது என்ற அடிப்படையில் சிந்தித்த சிந்தனையாளர்கள் மொழி, அதிகாரம், அறிவியல், அழகியல், உளவியல், வரலாறு, தகவல் தொடர்பு என எல்லாவற்றிலும் புதிய தர்க்க நிலைகளை உருவாக்கிச் சென்றனர். இந்த அடிப்படையில் உலகளாவிய இயக்கத்தினையும் மானுடச் செல்நெறிகளையும் ஆய்வு செய்ய வேண்டிய தேவை இன்றைய தலைமுறையினருக்கு இருக்கிறது.

மொழி பற்றிய பழைய நம்பிக்கைகள் காலாவதியாகிவிட்ட காலத்தில் மனம் மற்றும் மனித செயற்திட்டங்கள் யாவும் வேறொரு விதமான புரிதல்களுக்குள் வந்துவிட்டது. மொழி, பேச்சு, நம்பிக்கை யாவற்றிலும் அதிகாரத்தின் நுண்ணிய அரசியலானது மர்மமாகச் செயற்படுவது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அறிவியலில் கட்டமைக்கப்படுகின்ற விடயங்களிற்குள் இருக்கும் நுண் அரசியலானது பெரும் கதையாடல்களை நிர்மாணித்திருக்கிறது. மதம், விஞ்ஞானம் போன்ற இப்பெருங் கதையாடல்கள் மானுட வாழ்வை இரகசியமாக வேவு பார்க்கவும், அடிமையாக்கி பணிந்து கிடக்கவும், கட்டுப்படுத்தவும் பயன்பட்டது.

தொழில்நுட்பம் வளர்கிறபோது அவற்றினை அதிகார மையங்கள் தமது புதிய சுரண்டல் கருவிகளாகவும், அதிகாரம் செலுத்தும் கருவிகளாகவும் பயன்படுத்திக் கொள்கின்றன. குழப்பகரமான உள்ளீடுகளோடு உருவாக்கப்பட்ட கலைகள் மீதிருந்த பழைய மதிப்பீடுகள் யாவும் கேள்விக்குள்ளாக்கப்பட்டதால், அது மானுட விடுதலை என்ற வார்த்தை ஜாலங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டது.

இந்த நிர்க்கத்தியான கண்டுபிடிப்புக ளெல்லாம் நவீனகால மனித வாழ்வைச் செழுமைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளாக அமையவில்லை. மாறாக அவனைப் பேத லிக்கச் செய்யும் தர்க்கச் சூழலையே உருவாக்கியுள்ளது.

## பண்பாட்டுக் கூறுகளுக்குள் நிலவும் நுண்ணதிகார அரசியல்

ஒவ்வொரு காலகட்டத்திலும் மனிதன் தறிகெட்டு திரிவதாகக் கருதி, மனித நடத்தைகள் மீது புதுப்புது அறநெறிச் சிந்தனைகள் அதிகாரம் செலுத்தி தொந்தரவு செய்து வந்திருக்கிறது. எந்தவொரு நடத்தையின் மீதும், சரி அல்லது பிழையென அறுதியிட்டுக் கூறமுடியாததொரு பகுத் தறிவின் குழப்பகரமான சூழ்நிலையில் ஒழுக்கம் என்பது அதிகாரத்தின் நுண் அரசியல் செயற்பாடு கொண்டதாய் அமைந் துவிடுகிறது. மனிதனின் சுயம் **(Self)** என்பது உண்மையில் அவனுக்குள் இருக்கின்ற ஒன்று இல்லை. மாறாக அது நமக்கு வெளியில் இருக்கும் மற்றவைளினால் உருவாக்கப்படுகிறது. உயிரினங்களின் மனமானது புற அனுபவங்களின் படிம மாகவே கருதப்பட வேண்டியதாகும். அதாவது மனம் என்பது மொழியுடனான அறிதலின் பின்னரான அனுபவ நுகர்வினா லானதாகும். புறத்தின் படிம ஆளுமைக்குள் அகப்பட்ட அடிமைத்துவ நிலைதான் மனத்தின் பண்பாக இருக்கிறது.

பேச்சு என்பது ஒரு செயல். அது அர்த்தங் களை உருவாக்குகிறது. பேச்சு பேசுபவர் களுக்கிடையே பலவகை அடையாளங் களை நிறுவுகிறது. பேசுதல் என்ற செயற் பாடானது அதை நடத்துகின்ற சுயத்தையும் அதனைக் கிரகிக்கின்ற மற்றவையையும் கொண்டது. இங்கு மற்றவையின் மூலம் சுயம் அங்கீகரிக்கப்படுகிறது. படிமங்களின் கட்டுப்பாடுகளுக்குள் சிக்குண்ட மனமானது வார்த்தைகள் எனும் குறியீடுகளால் நிர்வகிக் கப்படுகிறது. ஆனால் யதார்த்திற்கும் குறியீடு களுக்கும் இடையில் எந்த சம்பந்தமும் இல்லாமல் இது நடந்தேறுகிறது. மனிதனைப் பீடித்துள்ள படிம ஆளுகையானது சமநிலை மனதின் மூலமாக அவனது செயல்களுக்கான பகுத்தறிவுத் தன்மையை நிலைநிறுத்த முற்படும் அதேவேளை குறியீடுகள் சூழலில் உள்ளவற்றை அர்த்தமுள்ளவையாக மாற்ற முற்படுகின்றன **(Michel Foucault, 1969 : 23, 34)**

உலகம் வார்த்தைகளால் ஆனது. சொற்கள் பிறப்பிக்கின்ற அர்த்தங்கள் எப்போதும் அலைவு கொண்டவையாக இருக்கின்றன. அவற்றினால் காலாகாலத்திற்கும் ஒரே அர்த்தத்தைக் கொண்டிருக்க முடியாது. ஒரு பேச்சின் அல்லது எழுத்தின் மூலம் நிர்ணயிக் கப்படுகின்ற சொல்லுக்கு வழங்கப்படுகின்ற தனித்துவமான விடயம் என்பது அந்தக் கணத்துக்கான அர்த்த வெளிப்பாடு என்பதாக இருந்தாலும், பின்னர் அதற்குள் குறியீட்டு அர்த்தங்களின் முடிவுறாத விளையாட்டு ஆரம்பமாகிவிடுகிறது. அர்த்தங்களின் முடிவுறாத தன்மையினை ஆளுமை வித்தி யாசங்களும், அனுபவ வித்தியாசங்களும், கால வித்தியாசங்களும் நிலை நிறுத்து கின்றன. மொழிக்குள் சொற்களின் அர்த்த மானது தொடர்ச்சியான மாற்றங்களைப் புதுப்பிக்கும் விளையாட்டை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றன. இயங்கலின்போது சொற்களின் பயன்பாடானது வரைவிலக்கண கட்டமைப்பிற்கு வெளியே பயணிப்பது மட்டுமல்லாமல், அந்தக் கட்டமைப்பிற்கு அப்பால் தொழிற்படுகின்ற ஒருமைத்துவ ஸ்திர நிலையைத் தணித்தும் விடுகிறது. மொழிக்குள் நிரந்தரமாக நம்பப்படுகின்ற அர்த்தத்தை விடவும் மேலதிக அர்த்தங்கள் உள்ளன. ஒரு கணத்தில் ஒரு இடத்தில் ஒரு சொல் உணர்த்துகின்ற அர்த்தமானது பிறிதொரு கணத்தில் வேறு அர்த்தப் புரிதல் கொண்டதாக மாறிவிடக்கூடும். இந்த நிலையில் உண்மை களின் தன்மைகளைப் பற்றி ஆழமாக ஆராய வேண்டியிருக்கிறது.

உண்மை என்பது சகலவிதமான ஒழுங்கு களையும் அனுசரிக்கும் இயல்புடையதாய் இருக்கிறது. உண்மைகளின் பிரயோக வடிவங் களான சொற்கள், பேச்சுகள், அறிக்கைகள் அனைத்தும் அதிகார வலைப்பின்னலாக செயலூக்கம் பெற்றிருக்கின்றன. தற்செயலான கருத்து வெளிப்பாடுகளாக உருவாகும் இம்

மொழிப் பிரயோகமானவை தொடர்ந் தேர்சியாக செப்பனிடப்பட்டாலும் இது நிரந்தரமற்ற உந்துதல்களையே தன்னுள் அமைத்திருக்கிறது.
**(Jacques Derrida, 1973 : 32, 48)**

வெகுசன மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படு கின்ற கருத்துருவாக்கங்களின் புழக்கமானது உண்மைக்கான அந்தஸ்தை வழங்குகிறது. இப் புழக்கத்தை கதையாடல் எனலாம். இந்தக் கையாடலுக்கு உறுதியான, நிர்ணய மான தளம் கிடையாது. இந்நிர்ணயமான தளமற்ற உண்மையின் எடுத்துரைப்பானது பொதுப் புத்தியினால் இயைபாக்கம் அடை யக்கூடியதாயுள்ளது. இவ்வாறு ஏற்படுத்தப் படுகின்ற உண்மைகள் வேறு உண்மை களைப் பிறப்பிப்பதற்கு பங்களிப்புச் செய் கின்றன. இதனால் உண்மைகள் சதா காலமும் மாறிக் கொண்டே இருக்கின்றன. உதாரணமாக அரசியல், விஞ்ஞானம், கலைகள் மீதிருந்த பழைய நம்பிக்கைகள் எல்லாம் தற்காலத்தின் புதிய கண்டுபிடிப்பு களினால் புது உண்மையாக்கம் செய்யப் பட்டிருப்பதனைக் காணலாம். இந்த மாற்றங் கள் சூழ்நிலைகளுக்கும் காலத்திற்குமுரிய கதையாடல்களின் செழுமைப்படுத்தல்களி னால் சாத்தியமாக்கப்படுகின்றன.

எனவே, உண்மைகள் யாவும் உருவாக்கப் படுகின்ற உண்மைகள் **(Created Realities)** என்பது மட்டுமன்றி காலம், இடம் என்ப வற்றின் வேறுபாடுகளுக்கேற்ப இவை மாறுபட்டும் அமைகின்றன. உண்மை என்பது பகுத்தறிவு சார்ந்த முடிவுகளின் ஒரு பகுதி யாகக் கருதப்பட்டாலும் கூட அதற்கு பிரத் தியேக அந்தஸ்து வழங்குவது சிக்கல்மிக் கதாகிறது. ஏனெனில், உண்மைகள் மாறிக் கொண்டிருக்கின்ற நிரந்தரமற்ற நிலையில் இது உண்மை, இது பொய் அல்லது இது சரி, இது பிழை என தீர்மானமெடுக்கும் மனச்சார்பினை ஏற்றுக்கொள்ள முடியாது. உண்மைகளை நிலையானவையாகப் பேணிக் கொண்டிருக்கும் பாரம்பரிய சிந்தனைகள் குறிப்பிட்ட தீர்மானங்களுக்கு அப்பால் நிலவும் அறிய வேண்டிய சுவாரஷ்யங்களைக் கண்டுபிடித்து விடாமல் முடக்கி விடுகின்றன. இங்கு நம்பிக்கை அதிகாரத்தினை உருவாக்கி செயற்படுகின்றது **(J. F. Lyotard, 1979: 11, 14)**

உண்மைகள் பற்றிய தற்காலச் சிந்தனைகளின் பின்னணியில் கலைப்படைப்புசார் விடயங் களைப் பார்க்கும்போது வெகுசன மக்களின் வாழ்வியலையும் பண்பாட்டையும் பீடித்திருந்த பல்வேறு நோய்க் கூறுகளான கலைகளின் இறுகிய வரன்முறைகள் காலாவதி நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன. படைப்புச் சூழலென் பது எப்போதும் இலட்சிய விருப்புறுதிகளின் பக்கம் சாய்வு கொண்டதாக இருப்பதன் மூலம் தன்னை நேர்வழி மிக்கதெனக் காண்பித்து வந்தது. இது மனித குலத்தின் சுயாதீனத்திற்கு எதிரான அதிகாரச் செயற்பாடன்றி வேறில்லை.

இதுகாலமும் கலை வெளிப்பாடுகளுக்கு இருக்க வேண்டிய அடிப்படைக் கூறுகளாக் கூறப்பட்ட யதார்த்தம், அழகியல், மனிதநேயம் போன்றவை தற்காலத்தில் கடுமையான விமர்சனங்களுக்குட்படுத்தப்பட்டு வருகின்றன. இயல்புகளை மீறி, சிந்தனைக்குத் தடையாக இருக்கும் யதார்த்தவாதமானது குறிப்பிட்ட தரப்பின் நியாய வரன்முறைகளுக்கு இசை வானதாகச் செயற்படுகின்றது. அழகியல் என்ற எண்ணக்கருவானது ஏற்கனவே பொதுப்புத்தி கட்டமைத்து வைத்திருக்கின்ற சமூக மனத் தளத்தின் சீரிய பரிந்துரைகளையே அளவு கோலாகக் கொண்டிருக்கிறது. பண்பாட்டு உற்பத்தியின் தளத்தில் கிடைக்கும் வேறுபாடு களையும், மற்றவைகளையும் புறமொதுக்கி விட்டுச் சுத்திகரிக்கப்பட்ட பிரத்தியேக வகை யான இரசிப்புக் காரணிகளுக்கு மட்டும் சிறப் புத் தன்மை வழங்குவதன் மூலம் பிறக்கின்ற மகிழ்தன்மை அழகியல் எனக் கட்டமைக்கப் பட்டிருந்தது.

பண்பாட்டு அதிகாரத்தின் சிறைக்குள் அடைபட்டிருந்த அழகியலை தகவல் தொடர் புலத்தின் இலத்திரனியல் இரசனைவெளி செழிப்பாக்கம் செய்து சுயாதீன பொதுமைத் தன்மையுடையதாக வியாபிக்கச் செய்திருக் கிறது. அத்துடன் மனிதநேயம் என்பது குழு முறை அலகுகளுக்குள் மட்டுப்படுத்தப் பட்டிருக்கும் நிலையில் அதனைக் கலைகளில் இடம்பெறச் செய்வதிலும் நெருக்கடி இருக் கிறது **(Jean Baudrillard, 1988: 98, 166)**

ஒரு கலைப் படைப்பொன்றில் இருப்பதாகக் கருதப்படும் மனிதநேயம் வேறொரு குழுவின் பார்வையில் வன்முறையாக நோக்கப்படு வதற்கான சாத்தியங்களுண்டு. அதேபோல ஒரு குழுவின் வன்முறைச் செயற்பாடு வேறொரு குழுவினரால் மனிதாபிமானமாகப் புரிந்துகொள்ளும் சாத்தியங்களும் உண்டு. அதாவது, வன்முறை கலையாகவும் கலை யானது வன்முறையாகவும் தளங்கள் மாறக் கூடிய தன்மை இங்கு காணப்படுகின்றது. இதனால் யதார்த்தம், அழகியல், மனித நேயம் போன்ற வரையறைகள் கேள்விக்க உள்ளாக்கப்படுகின்றன. இப்படி பகுத்தறிவின் பயங்கரத்திலிருந்து கலைப் படைப்புக்கள் சுதந்திரமடைய வேண்டிய தேவை இருக் கிறது. அறிவின் நிலைப்பாடு மீதான பழைய விமர்சனங்களைக் கடந்து வேறொரு எல்லைக்குள் பிரவேசிக்க வேண்டிய தேவை யும் உணரப்படுகிறது. இதைப்போல, சமூக வியல், விஞ்ஞானம், மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி என்பன பிரயோகிக்கின்ற நடை முறைகளின் மீது அளவு கடந்த நம்பிக்கை கொள்வது புத்திசாலித்தனமாக இருக்க முடியாது. விஞ்ஞான அறிவு என்பது கூட கட்டமைக்கப் படுகின்ற கருத்துருவாக்கத்தின் விளைவுதான் **(Ibid: 130 – 133)**

மொழிக் கொள்கை, தொடர்பாடற் சிக்கலும் இலத்திரனியல் இயந்திரங்களும், அட்சர கணித முறைகளும் தகவல் விஞ்ஞானமும், கணனியும் அதன் மொழியும், கணனி மொழிகளுக்கிடையில் பரிவர்த்தனைப் பிரச்சினைகள், தகவல் களஞ்சியப்படுத்தல் நெருக்கடியும் தரவு வங்கியும், தொலை வியலும் அறிவின் உறைவிடமும் என எண்ணற்று விரியும் அரூப நெருக்கடிகள் பலவற்றுடன் விஞ்ஞானமும் தொழில்நுட் பமும் செயற்பாட்டு முறைகளைக் கொண் டிருக்கின்றன. இத்தொழில்நுட்பங்களினால் நிகழ்த்தப்படுகின்ற இடுகைகள் அறிவின் மீது குறிப்பிடக் கூடியளவு தாக்கத்தினை ஏற்படுத் துகிறது. தொழில்நுட்ப அரங்கில் கற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் தொகையாக நிர்மாணிக்கப்படுகின்ற தற்கால அறிவானது மனிதனின் உடலுக்கு வெளியில் நிறுத்தி வைக்கப்படுகிறது. அதனை நோக்கி புதிய ஆய்வுகளும் முன்மொழியப்படுகின்றன. இதன்மூலம் வேறுவகைப் புதிய நிலைப்பாடுகள் நோக்கி அறிவின் இயங்கு தன்மை விரிவுபடுத் தப்படுகிறது.

அறிவின் உற்பத்தியாளர்கள் தாங்கள் கற்க விரும்புவதையோ கண்டுபிடிக்க விரும்பு வதையோ தத்தமது சிந்தனை எல்லைக்குள் பரிவர்த்தனை செய்யக் கூடிய வகையில் கருத்து நிலைக்குள்ளேயே நிறுத்தி வைக்கின் றனர். இவ்வறிவிற்கேற்ப அவர்களுக்கான மதிப்பும் தீர்மானிக்கப்படுகிறது. பண்ட விநி யோகம் மற்றும் நுகர்வு என்பவற்றுக்கிடை யிலுள்ள பண்டப் பெறுமதி உறவுபோல அறிவு வழங்குனருக்கும் அறிவைப் பெறுவோருக்கு மிடையிலான உறவு பேணப்பட்டு வருகிறது. விற்பனைக்குப் பொருத்தமான முறையில் உற்பத்தியாக்கப்படுகின்ற அறிவிற்கு விலை நிர்ணயிக்கப்பட்டு அவை புதுப்புது உற்பத்தி களாகச் சந்தைப்படுத்தப்படுகிறது. இங்கு அறிவானது நுகரப்படுகின்றபோது அதன் பயன்பாட்டுப் பெறுமதியானது இழக்கப்படுகின்ற நிலையில் அங்கு தற்காலிகத்தன்மை உணரப்படுகிறது **(Ibid : 69, 87)**

அறிவின் நிலை பற்றி ஆராய்கின்றபோது அதன் உள் அடுக்குகளில் தொழிற்படும் அரசியலையும் ஆராய வேண்டியிருக்கிறது. அறிவுக்கும் அதிகாரத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு கொண்ட அரசியல் அடிப்படை யொன்று மொழியின் பிரயோகச் செயற்பாடாக இடம்பெறுகிறது. சமூக இருப்பில் காணப்படு கின்ற அடிப்படைச் சமூகப் பிணைப்பானது மொழி விளையாட்டுகளால் நகர்த்தப்படுகிறது. மொழியினுள் காணப்படுகின்ற பல்வேறு வகையான எடுத்துரைப்புகளும், அவை எங்கு வைக்கப்பட வேண்டும் என்ற வரையறுப்பு களும் விதிகளினால் நிர்ணயிக்கப்பட்டிருக் கின்ற விளையாட்டுகளையே ஞாபகப்படுத்து கின்றன. பெரும்பாலும் மொழி விளையாட்டில் அதனைப் பிரயோகிக்கின்றவர்களினாலேயே அவ்விதிகளைச் செயற்படுத்த முடிவதில்லை.

ஏக நிலைகளை வலியுறுத்துகின்ற மரபு வழிக் கொள்கைகள் மற்றும் பகுத்தறிவுக் கொள்கை கள் என்பன வேறு மாற்றுத் தெரிவுகளை மூடிவிடும் அபாயங்களைக் கொண்டவை. இப்பிரிவுகள் இரண்டும் எதிர்ச் சிந்தனை மையங்களாகத் திரட்சியுற்றிருக்கின்றன. இவை

பன்மைத்துவப் புரிதலுக்கும் மாற்றுகளின் மீதான அக்கறைகளுக்கும் எதிரானவையாய் இருப்பதனால் காலாவதியாக்கப்பட வேண்டியவையாகின்றன.

விஞ்ஞான அறிவியலில் குறிப்பிட்ட விஞ்ஞான புனைவுத் திட்டத்தினுள் இணையக் கூடியவை மட்டுமே அறிவு எனக் கொள்ளப் படுகிறது. முழு விஞ்ஞானத் திட்டங்களும் வெகுஜன சம்மதங்களினால் அதற்கான அங்கீகாரத்தைப் பெறவேண்டி இருக்கிறது. இதனால் புனைவு நுட்பத்திடம் அது தஞ்சமடைய வேண்டியநிலை ஏற்படுகிறது. எப்போதும் விஞ்ஞானப் புனைவுகள் நட்சத்திர அந்தஸ்தைப் பெற்றுக் கொள்கின்றன. குறித்த விஞ்ஞான உண்மையினை புனைந்து நிர்மாணிக்கின்ற விஞ்ஞானி குறித்த அறிவின் பிதாவாகி விடுகின்றார். இது ஒற்றைக் கதையாடல் வகையினதான ஒரு ஆபத்தான நிலையாகும். மானுட விடுதலைக்குப் பங்காற்றுவதாகவும் நித்திய உலகிற்கு அழைத்துச் செல்வதாகவும் தம்மைப் பிரகடனப்படுத்திக் கொண்ட தத்துவங்களும், தெய்வீகச் சிந்தனைகளும் இன்றைய அறிவு பற்றிய விரிவான விவாதங்களினால் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றன **(J. F. Lyotard: 27, 31)**

உலக மட்டத்தில் வெகுஜன மனநிலையில் பேணப்பட்டு வந்த ஒருமை என்ற நம்பிக்கைக் கட்டமைப்பின் மீது ஏற்பட்டிருக்கும் தகர்விற்குப் பிறகான சூழலை பிரமாண்டமான இலத்திரனியல் தொடர்பாடலின் பரவுகை நிரப்பியிருக்கிறது. உலகப் பண்பாட்டின் மீது, வாழ்வின் மீது பரவிக் கிடக்கும் உண்மைத்துவ நம்பிக்கையானது இலத்திரனியல் தொடர்பாடல்களின் கலாசார உற்பத்திகளால் கட்டமைக்கப்படுகின்ற மீ உண்மைகளே **(Hyper Reality)** எனும் கருத்து மேலெழுந்து வந்து விட்டது. இந்த யுகம் ஏக நித்திய உண்மைகள் இல்லாத ஆனால் உண்மை போன்ற பாவனைகளால் நிரம்பியுள்ளது. இலத்திரனியல் தகவல் தொடர்பு பரிமாற்றத்தினால் எதிர்மாற்றுப் புனைவாக முன்வைக்கப்படும் அம்சங்கள் நித்திய உண்மை போன்ற புரிதலை ஏற்படுத்துவதோடு அவை உண்மைகளின் பல்வேறு தோற்றங்களைச் செயற்கையான புலப்பாடுகளால் மூடி விடுகின்றன.

எந்தவிதமான செய்திகளிலும் கருத்துப் பரிமாற்ற விபரணங்களிலும் பரிமாறப்படும் விடயங்கள் அந்நிகழ்வுகளுக்கான புனைவு நியாயங்களைக் கட்டமைத்து விளக்கமளிக்கும் பணிகளையே ஆற்றுகின்றன. உலகத்தின் ஏதோவொரு மூலையில் ஒரு சம்பவம் விற்பனைக்கான பண்டப் பெறுமதியாக்கச் சிந்தனை அடிப்படையில் மதிப்புக் கூட்டப்பட்டு நுகர்வுச் சந்தைக்கான உற்பத்தியாக்கப்படுகிறது. இதன் விற்பனையைத் தீவிரப்படுத்துவதற்கான காரணகாரிய நியாயங்கள் கட்டமைக்கப்பட்டும் விடுகின்றன. மிக விரைவான கால இடைவெளியில் இது மனித வாழ்வின் அசைவுத் திசைகளைத் தீர்மானிக்கின்ற சர்வ வல்லமை கொண்டதாகவும் மாறிவிடுகிறது.

தொழில்நுட்பம் விருத்தியடைந்துள்ள இந்த யுகத்தின் கலாசார விநோதங்களில் இருந்து உண்மைகளைப் பேதங்கண்டு கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளது. ஊடகங்கள் கற்பனை பண்ண முடியாத அளவில் பெரும் எண்ணிக்கையில் பெருகியிருக்கிறது. இவ்வூடகங்கள் நிகழ்வுகளை அதன்மூல அம்சங்களிலிருந்து விடுவித்து சேதம் செய்து அல்லது வடிகட்டி, இதுதான் மிகச் சரியான உண்மையென வடிவமைத்து நியாயப்படுத்துகிறது. இதனை மீ உண்மையின் தோற்ற வடிவமெனவோ அல்லது உண்மையின் வேறு பதிலிகளாகவோ தான் மனங்கொள்ள முடியும் **(Jean Bavdrillard, 1994: 2 – 20)**

இன்று நாம் வாழும் உலகம் இலத்திறனியல் தகவல்களின் நகல் உலகத்தினால் மாற்றீடு செய்யப்படடிருக்கின்றது. இங்கு நாம் தரிசிக்கும் எதுவும் தகவல்களின் போலியான பாவனைகளேயன்றி வேறில்லை. நுகர்வுக் கலாசாரத்தில் குறிகளின் பரிவர்த்தனைப் பெறுமதி கொண்டிருக்கின்ற நிர்ணயத் தன்மைகளினூடாக அவை அதீத உண்மைகளின் உருவாக்கத்திற்கு வழங்குகின்ற பங்களிப்பினை நாம் உணர முடியும். குறிப்பிட்ட ஒரு வர்த்தகப் பெயர் ஒரு பொருளின் தரத்தையோ அல்லது நவநாகரீகத்தையோ பறைசாற்றும்

பாங்காக உணர்த்தப்படுகிறது. ஒரு நாட்டு அதிபரின் கழுத்தில் கிடக்கும் சால்வை அவருக்குப் பதிலியாக கேலிச் சித்திரங்களில் வரையப்படும்போது, அது நாட்டு அதிபரைக் குறித்து நிற்பதாக நம்பப்பட்டு விடுகிறது. உண்மையில் சால்வை பிரத்தியேகமான அதன் அர்த்தங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு வேறு உண்மைகளின் அர்த்தமாகப் பாவனை செய்யப்படுகிறது.

மீ உண்மையானது உண்மையான உணர்விலிருந்து பிரக்ஞையினை தந்திரோபாயமாக விலக்கிவிட்டு, செயற்கையாக உருவாக்கப்படும் பாசாங்கான உண்மை மீது கவனத்தைத் திசைதிருப்பி விடுகிறது. அடிப்படையில் இது வெறும் தோற்றப்பாட்டின் முடிவற்ற மீள் உற்பத்தியினை தொடர்ந்து செய்கிறது.

மார்க்சின் அணுகுமுறைகளில் இருந்து விடுபட்டுப் போன தற்கால சமூகவியல் களத்தில் பயன் மதிப்பினை பரிவர்த்தனை மதிப்போடு முரண்படுத்திப் பார்ப்பது முக்கியமாகும். ஒரு பண்டத்துக்கான பயன் மதிப்பு, பரிவர்த்தனை மதிப்பு ஆகியவை குறித்த பழைய அணுகுமுறை அப்புறப்படுத்தப்பட்டு மதிப்பு என்பது சுயாதீனமானதாக மாற்றப்பட்டு விட்டது. இதனை நாம் பாவனை எனக் கருதிக் கொள்ளலாம் **(Jean Bavdrillard, 1975: 21 – 25)**

இனிமேல் பொருள்கள் அன்றி குறிகள்சார் பரிவர்த்தனை இடம்பெறக் கூடிய நிலை உருவாகிவிட்டது. இந்த நிலை உழைப்புச் சக்தி என்ற தளத்திலும் நடந்துள்ளது. உற்பத்தியின் இலக்கு என்பது அழிக்கப்பட்டதன் மூலம் உற்பத்தி முறை என்பது நியதியாக்கப்பட்டு விட்டது. இந்நிலையில் ஒத்த மதிப்புள்ள பண்டங்களை **(Commodity Law of Value)** சமமாக வைத்து மதிப்பிட முடியாத நிலை உருவாகி விடுவதனால் எந்த நிலையிலும் நிர்ணயிக்க முடியாத தன்மையை வலியுறுத்தும் அமைப்பு பெறுமதி தான் சிபாரிசு செய்யப்பட வேண்டியதாகிறது. **(Structural Law of Value)** அதாவது பண்டம் பற்றிய பாரம்பரிய பார்வைக்கு அமைப்புக் குறியீட்டு மதிப்பானது புதிய அந்தஸ்தை வழங்குகிறது. இதனால் பண்டத்தின் பயன்மதிப்பும், பரிவர்த்தனை மதிப்பும் செயலிழக்கம் செய்யப்பட்டு அமைப்பு மதிப்பானது முன்னிறுத்தப்படுகிறது. இதனால் புதிய மோஸ்தர்களை அடிக்கடி களம் இறக்கி அபரிமிதமான உற்பத்தியைச் செய்து குவிக்கும்போது நுகர்வுச் சந்தை பன்மடங்காக் கப்படுகிறது. இந்தச் சூழ்நிலையினால் கையாளப்படும் சுரண்டலுக்குள் நசுக்கப் படுகின்ற வாழ்க்கை முறைதான் புதுவிதமான பண்பாட்டுப் பாவனைகளாக நிலைநிறுத்தப்படுகின்றது. இந்தப் அழுத்தங்களுக்கு ஊடாக நாம் பண்ட பெறுமதி மதிப்பு நிலையிலிருந்து அமைப்புப் பெறுமதி நிலைக்கு நகர்த்தப் பட்டிருக்கிறோம். இது இயல் கடந்த அகில முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் சர்வ வல்லமையான நிலைமை என உணரலாம் **(Jean Bavdrillard, 1988: 49, 69, 129)**

உழைப்பு என்பதன் அர்த்தம் அழிக்கப்பட்டு விட்டதனால் புரட்சி என்பது இல்லாத நிலை உருவாகிவிட்டது. இன்று எல்லாம் குறிகளாக நோக்கப்படும் நிலையிலிருக்கிறது. இதனால் தேவைக்கான உற்பத்தி என்னும் நிலை அழிக்கப்பட்டு உற்பத்திகளை நுகர்வதற்கான தேவை என்பது சாத்தியமாக்கப்பட்டு விட்டது. உபரி உற்பத்தியின் கட்டற்ற தன்மையானது பயன் மதிப்பின் செயற்பாட்டை ஸ்தம்பிக்கச் செய்திருக்கிறது. எல்லாவிதமான துறைகளிலும் ஏராளமான உற்பத்திகள் உருவாக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், இவை எதுவும் முழுமையாகப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இங்குதான் பயன் மதிப்பின் மீதான கேள்விகள் தொடங்குகின்றன.

இயந்திரங்களினாலான உற்பத்திக் களச் செயற்பாட்டில் உற்பத்தி என்பது உழைப்பு என்ற வரையறைக்குள் பார்க்கப்படுவதில்லை. இங்கு இயந்திரங்கள் மனிதனுக்கான *இலக்குகளை* நேரடியாக உற்பத்தி செய்கின்றன. அதன்படி உற்பத்தியினை இயந்திரங்களே உற்பத்தி செய்கின்றன. உழைப்பு என்ற பார்வை இல்லாமலாகி உழைப்புத் தன்னைத் தானே மறு உற்பத்தி செய்து கொள்ளும் நிலையில் இருப்பதனால் அங்கு உற்பத்திக் குணம் என்பது எதுவும் இருப்பதில்லை. இன்று எல்லாவிதமான உழைப்பும் சேவை உழைப்பாக கருதப்படக்கூடிய நிலைக்கு வந்து

சேர்ந்திருக்கின்றன. இதில் தொழிலாளிகளின் வகிபாகமானது உற்பத்தி முகவர் என்ற அடிப்படையில் மட்டுமே உள்ளது.

மூலதனத்தின் செயற்பாட்டினைக் குறியீட்டு அர்த்தங்களினூடாகப் புரிந்து கொள்வதன் மூலமும் பண்பாட்டு நம்பிக்கைகள், இதர இயங்குதல் அனைத்தையும் குறியீட்டுத் தளத்திற்கு மாற்றுவதன் மூலமும் தற் போதைய நெருக்கடி நிலைக்கு எதிரான மாற்றுத் திட்டத்தினை உருவாக்க முடியும்.

உழைப்புச் சக்தியின் சிதைவானது மனி தனின் மரணமாகவே நோக்கப்பட வேண்டும். உழைப்பின் மூலம் சுரண்டப்படும் தொழி லாளி சிறிது சிறிதாகச் சாகடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறான். மூலதனம் மூலம் தொழிலாளியின் உயிரைச் சுரண்டுபவன் கூலியின் மூலம் தன்னை விடுவித்துக் கொள்ள முயல்கிறான். தொழிலாளிக்கு மூலதனம் உழைப்பைக் கொடுக்கும்போது அதற்கான கூலியானது உழைப்பவனை நுகர்வோனாக மாற்றுகிறது. நுகர்பவனின் செயற்தளமானது மாய விம்பங்களின் கூட்டுப் பலி கொள்ளலினால் மீட்டெடுக்கப்படுகிறது. இந்தச் சுற்றுவட்டத்தின் வல்லமை மிக்க தீவிர இயக்க ஒழுங்கானது மானுடத்தின் விதியாக எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது **(Frederic Jameson, 1991: 1 – 55)**

## முடிவுரை:

இலத்திரனியல் தொடர்பாடல் பரிமாற்றமும், தொழில்நுட்ப மேலாண்மையும், இயந்திரப் பரிகரணமும் உழைப்புப் பற்றிய அர்த்தத்தின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தி இருக்கிறது. இதனால் உலகளாவியரீதியில் அரசியல், பொருளாதாரம், பண்பாடு என்பவற்றின் மீது பலவிதமான நெருக்கடியும் ஸ்தம்பித நிலையும் தோன்றி இருக்கிறது. இது மனிதனை வக்கற்ற கையறு நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

இன்றைய மனிதனுடைய நாளையப் பொழு துக்கான நிகழ்ச்சி நிரலானது தனி மனிதர் களின் கைகளில் இல்லை. அரசுகளின் கவனங்களுக்குள்ளும் இல்லை. அது சர்வ வல்லமை மிக்க சந்தைப் பொருளாதார நுகர்வுக் கலாசார மையங்களின் அதிகார பீடங்களினால் திட்டமிடப்படுகிறது. இதில் அரசுகள் கூட அவற்றின் ஏவலர்களாக மாற்றப்படுகின்ற நிலையில் மனித நடத்தை களும், பண்பாடுகளும் வெறுமையானதாகும்.

வரலாற்றுக் காலத்தில் மன்னர்களின் முன்பு அடிமைகள் உயிர்ப்பலி இடப்படாமல் அவர் களுக்கு மன்னிப்பு அளிக்கப்பட்டு சேவகம் செய்ய அனுமதிக்கப்படுவதானது அவர்களை தவணை முறையில் மரணிக்கச் செய்வதற்கு ஒப்பானதாகும். இதுபோல முதலாளித்துவ சர்வ வல்லமையின் முன்பு மனிதன் மண்டியிட்டுக் கிடத்தப்பட்டிருக்கிறான். இந்த நிலையை ஏற்றுக் கொண்டு வாழும் மானுட வாழ்க்கையின் வெளிப்புற அம்சங்கள் பாவனைகளால் நிரப்பப்பட்ட பாசாங்கான பண்பாடுகளன்றி வேறில்லை.

## References:

Foucault, Michel. 1972 (1969), *The Archaeology of Knowledge,* New York: Pentheon Books.

Derrida, J., (1978), *Writing and Difference,* trans. Alan Bass, Chicago: University of Chicago Press.

Derrida, J., (1973), *Speech and Phenomena,* Evanston: Northwestern University Press.

Lyotard, J ï F., (1979), *The Post Modern Condition: A Report on Knowledge,* Minneapolis, University of Minnesota Press.

Baudrillard, J., (1988), *Jean Baudrillard: Selected Writings,* Stanford University Press.

Baudrillard, J., (1988), *The Ecstasy of Communication*, New York: Seniotext

Baudrillard, J., (1998), *The Consumer Society*, Faris: Gallimard.

Baudrillard, J., (1994), *Simulacra and Simulation*, Ann Arbor: The University of Michigan Press.

Baudrillard, J., (1975), *The Mirror of Production*, St. Louis: Telos Press.

Jameson, F., (1991), *Post Modernism, or the Cultural Logic of Late Capitalism,* Durham: Duke University Press.